27.11.2025

OS No: 68/2013

வா.சா. 2 திரு. பாலமுருகன் த/பெ. கந்தசாமி

**<u>1 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

எனக்கு தற்போது வயது 60 என்பதால் எனது அரசு பணியில் பணிஓய்வு பெற்றுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பழைய பென்ஷன் தொகை வழங்கப்படுகிறது என்றால் சரிதான். நான் சாம்பவிகா அறக்கட்டளையின் கூட்டத்திற்கு விடுமுறை எடுத்து செல்வேனா அல்லது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் செல்வேனா என்றால் கூட்டமானது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தான் நடைப்பெறும் கூட்டத்திற்கு விடுமுறை எடுத்து நான் சென்றதில்லை. 2003ல் இருந்து 2012 வரை சனி, ஞாயிற்று கிழமைகளில் நடைப்பெற்ற கூட்டத்திற்கு நான் சென்று வந்துள்ளேன். 2003 லிருந்து 2012 வரையான காலக்கட்டத்தில் மேற்படி அறக்கட்டளையின் கூட்டமானது சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் தான் நடைப்பெற்றதா என்றால் ஆமாம். 2012 பிறகு 2025 தற்போது வரை எந்தெந்த மாதங்களில் அறக்கட்டளையின் கூட்டமானது நடைப்பெற்றது என்றால் மேற்படி காலக்கட்டத்தில் கூட்டம் எதுவும் முறையாக நடைப்பெறவில்லை. 2012 முதல் 2025 வரை நான் எத்தனை கூட்டத்தில் கலந்து கொண்டேன் என்றால் 1 முறை கலந்து கொண்டேன். நான், காசி, மலர்வேணி ஆகிய மூவரும் அறக்கட்டளை கூட்டம் நடைப்பெறுவது சம்பந்தமாக அனைவருக்கும் தெரிந்தும் யாரும் வராத காரணத்தனால் நாங்கள் மூவரும் திருப்பத்தூர் ரோட்டில் உள்ள அலங்கர் மகாலில் கூட்டத்தை ஏற்படுத்திக்கொண்டோம். மேற்படி கூட்டமானது 2015 ம் வருடம் ஏற்படுத்தப்பட்டது. 2015பிறகு தற்போது வரை நாங்கள் மூவரும் அறக்கட்டளை கூட்டம் எதையும் கூட்டி கலந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். தாவா வழக்கில் 2015ம் வருடம் கூட்டம் நடத்தியது குறித்தும் அதற்காக அறக்கட்டளை உறுப்பினர்களுக்கு பதிவு தபால் மூலமாக தகவல் தெரிவித்தோம் என்பதற்கு ஆதரவாக ஆவணங்கள் ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் இல்லை. எனக்கு ஆங்கிலம் படிக்க தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ. 2 ஆவணமானது A.M. சேகர் என்பவர் காசி மற்றும் மாறன் ஆகியோர்களுக்கு அறக்கட்டளை மற்றும் பள்ளியின் சொத்துக்களை விற்பதாகவும் அறக்கட்டளைக்கு கூட்டவில்லை என்றும் கணக்கு வழக்குகளை சரிவர பராமரிக்கவில்லை என்றும் தெரிவித்து அனுப்பப்பட்ட வழக்கறிஞர்

அறிவிப்பு என்றால் மேற்படி அறிவிப்பு குறித்து எனக்கு தெரியாது. மேற்படி அறிவிப்பு எனக்கும் அனுப்பபட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி அறிவிப்பு அனுப்பிய பிறகும் அறக்கட்டளை மற்றும் பள்ளிகளில் கணக்கு வழக்குகளை சரியாக பராமரிக்கலும் அறக்கட்டளை கூட்டத்தை கூட்டமாலும் இருந்து வந்துள்ளோம் என்றால் சரிதான். வாசா.ஆ.2 அறிவிப்புக்கு பதில் அறிவிப்பு நாங்கள் அனுப்பியுள்ளோமா என்றால் இல்லை. காசி என்பவர் மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய கடிதம் வாசா.ஆ. 4 என்றால் சரிதான். அதன் பேரில் நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்றால் விசாரணை செய்தார்கள் முடிவு என்ன எடுத்தார்கள் என்று தெரியாது. வாசா.ஆ.4 ஆவணத்தின் அடிப்படையில் விசாரணை செய்யப்பட்டதாக நான் சொல்வது குறித்து எடுத்துக்காட்டிட ஆவணம் தாக்கல் செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. வாசா.ஆ. 5 ஆவணமானது CEO அவர்களுக்கு அனுப்பபட்ட கடிதம் என்றும் மேற்படி கடிதமும் வாசா.ஆ. 4 கடிதமும் ஒன்றுதான் என்றால் தான். வா.சா.ஆ. 6 ஆவணமானது மலர்வேணிக்கு RM.காசி அவர்கள் அனுப்பிய கடிதம் என்றும் அதில் மலர்வேணி கூடுதலாக பணம் வசூல் செய்ததாக குறிப்பிட்டு சங்கதி சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி வாசா.ஆ.6ன் அடிப்படையில் அறக்கட்டளையின் உறுப்பினர்கள் மலர்வேணியின் மீது என்ன நடவடிக்கை எடுத்தோம் என்றால் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. வாசா.ஆ.6ல் உங்களின் பினாமியாக எப்பொழுதும் போல உங்களின் கணவர் ஆசிரியர் சுரேஷ் கண்ணா கலந்துகொண்டார். உங்களேயே பொருளாளராக உங்கள் கணவர் முன்னிலையில் தேர்வு செய்து அதன்படி வங்கி கணக்குகளும் மாற்றப்பட்டுள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். 2013 பிப்ரவரி மாத்தில் நான் மேற்படி அறக்கட்டளையில் என்ன பதவியில் இருந்தேன் என்றால் உறுப்பினராக மட்டுமே இருந்தேன். 2013 பிப்ரவரி மாத்தில் மேற்படி அறக்கட்டளையின் செயலாளர் யார் என்றால் சேகர் ஆவார். பொருளாளர் மலர்வேணி ஆவார். வாசா.ஆ.8ல் குறிப்பிட்டுள்ள சாம்பவிகா மேல்நிலைப்பள்ளியின் செயலர் சேகர் என்றும் பொருளாளர் என்ற பதவிக்கு மலர்வேணி என்றும் சொல்லப்பட்டுள்ளது என்றால் பள்ளி கமிட்டிக்குதான் செயலர், பொருளாளர் என்ற பதவி உண்டு சாம்பவிகா மேல்நிலைப்பள்ளிக்கு கிடையாது. வாசா.ஆ.8ன் பெயரில் மேற்படி சேகர், மலர்வேணிக்கு எதிராக அறக்கட்டளை உறுப்பினர் சேர்ந்து நடவடிக்கை எடுத்தோமா என்றால் மேற்படி அறிவிப்பு குறித்து

எனக்கு தெரியாது. வாசா.ஆ. 8 குறித்து 2013 பிப்ரவரி மாத்தில் அப்போது நடந்த அறக்கட்டளை கூட்டத்தில் விவாதிக்கப்பட்டதா என்றால் இல்லை. RM.காசி அவர்கள் அறக்கட்டளை செயலர் பதவியில் இருந்து எப்போது விலகினார் என்றால் அவருடைய மகன் மாறன் இறந்த பின்பு 2012 வருடத்தில் சுயவிருப்பத்துடன் விலகிகொண்டார். மேற்படி அறிவிப்பிற்கு மலர்வேணி, சேகர் அவர்கள் பதில் எதுவும் அனுப்பினார்களா என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. 3 நபர்கள் அறக்கட்டளையிலிருந்து வெளியேறி அதற்காக 3 நபர்கள் அறக்கட்டளையில் சேர்ந்தது குறித்து திருத்தல் பத்திரம் ஏற்படுத்தி கொள்ளப்பட்டதா என்றால் ஆமாம். மேற்படி 2 திருத்தல் பத்திரங்களில் அனைத்து உறுப்பினர்களும் கையெழுத்து செய்துள்ளார்களா என்றால் ஆமாம். வாசா.ஆ. 16 ஆவணத்திற்கு பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் Private case போடப்பட்டு நிலுவையில் உள்ளது. மேற்படி Private case குறித்து ஆவணம் எதுவும் தாவா வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் ஆமாம். வாசா.ஆ. 16 ஆவணத்திற்கு பிறகு என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது என்றால் இருதரப்பினரும் சமரச பேச்சுவார்த்தையில் ஈடுபட்டோம். இருதரப்பினருக்கும் இடையே சமரசம் ஏற்பட்டதா என்றால் இல்லை. சேகர் மீதான முன்பிணை மனு தள்ளுபடி செய்யப்பட்ட பிறகு சேகரால் முன்பிணையம் கோரி மாவட்ட நீதிமன்றத்திலோ அல்லது உயர் நீதிமன்றத்திலோ மனு ஏதும் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் இல்லை. மேற்படி சேகர் அவர்கள் முன்பிணையம் பெற்று இருந்து வருகிறார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. வாசா.ஆ.19 ஆவணத்தில் நாங்கள் கோரியபடி ஆவணங்களை ரத்து செய்யமுடியாது என உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி உத்தரவிற்கு எதிராக என்ன நடவடிக்கை எடுத்துள்ளோம் என்றால் சீராய்வு மனு தாக்கல் செய்துள்ளோம். சீராய்வு செய்துள்ளது சம்பந்தமாக ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். 2003ல் நான் அரசு பணிக்கு சென்றதால் அதன் பிறகு அறக்கட்டளை கூட்டத்தில் நான் கலந்து கொள்ளவில்லை என்றும் அறக்கட்டளை உறுப்பினர் பதவியை இழந்துவிட்டேன் என்றும் சொன்னால் சரியல்ல. தாவா வழக்கில் வாதிக்கு எதிராக பிரதிவாதியாக இருந்து நான் எதிர்வழக்குரை தாக்கல் செய்து விட்டு தற்போது வாதிக்கு ஆதரவாக தாவா வழக்கின் பிரதிவாதிக்கு எதிராக என்னால் சாட்சியம் அளித்திட இயலாது என்றால் சரியல்ல. நான் அறக்கட்டளையில்

இருந்த போது பலன்களை அனுபவித்து விட்டு தற்போது மேற்படி அறக்கட்டளைக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

9ம் பிரதிவாதிக்கு குறுக்கு விசாரணைக்கு போதிய வாய்ப்பளித்தும் குறுக்குவிசாரணை இல்லை.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.11.27 17:30:13 +0530